29th October 1962]

(இ) அப்படியானால், சேலத்திலேயே அதை அமைக்க மத்திய அரசாங்கத்தை சென்னை அரசாங்கம் வற்புறுத்தியுள்ளதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

பூமி வெடிப்பு (நீலகிரி மாவட்டம்)

** 851 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) நீலகிரி ஜில்லாவில் சமீபத்தில் பூமி வெடிப்பு ஏதேனும் ஏற்பட்டுள்ளதா ?

(இ) அதனால் ஏற்பட்ட சேதம் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There have been no cases of landslides resulting in damage to life or property in recent times.

(*b*) Does not arise.

எரு உற்பத்தி (திருச்சி நகரம்)

** 852 கேள்வி.—திரு. என். சுப்பிரமணிய செட்டியார் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

திருச்சி நகரசபையால் நடத்தப்படும் மலக்குழி எரு உற்பத்தி (compost manure yard) *-யை வேறு இடத்துக்கு அப்புறப்படுத்தக் கோரி பொதுமக்கள், பஞ்சாயத்து போர்டுகள், வேறு பல ஸ்தாபனங்கள் திருச்சி கலெக்டரிடம் 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ந் தேதி கொடுத்த மனுவின்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?*

THE HON. SRI P. KAKKAN : The question of undertaking the mechanised method of composting is under consideration and the Municipality is on the look-out for an alternative site.

திரு. என். சுப்பிரமணிய செட்டியார் : அந்த இடத்தில் சேஷசாயி இன்ஸ்டிடியூட், காலேஜ் இருப்பதாலும், வேறு இன்டஸ்ட்ரியல் இன்ஸ்டிடியூட் இருப்பதாலும், அங்கிருக்கும் ஜனங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது என்பதாலும் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று முனிசிபாலிடியாருக்குப் பலமுறை மனுக் கொடுத்திருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதை புதுக்கோட்டை ரோடிலுள்ள குண்டூர்—மாத்தூர் இடத்திலே இடம் வாங்கி மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அங்கே 50 வருஷங்களாகவே இருக்கிறது. பிற்பாடு வீடுகள், ஒர்க் ஷாப்பு ஆகியவைகள் எல்லாம் வந்திருக்கின்றன. இருந்தாலும், அந்த இடத்தைவிட்டு வேறு இடத்திற்கு மாற்றப் பார்த்தார்கள். ஆனால் இப்போது போதுமான இடம் கிடைக்கவில்லை. அப்படி மாற்றுவதாக இருந்தால் 50 லிருந்து 100 ஏக்கர்கள் வரை தேவைப்படுகிறது. அதற்கு

முனிசிபாலிடியார் சிறந்ததொரு ஸ்கீம் ப்ரபோஸ் பண்ணி இருக்கிறார்கள். அதன்படி 90 ஏக்கர் எடுப்பது என்று அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதோடு 50 ஏக்கர் வாங்கி, இந்த கம்போஸ்ட் மென்யூர் யார்டை ஏற்படுத்துவதாக இருக்கிறார்கள். இப்போது இந்தக் குழியை சுத்தமாக நாற்றமில்லாமல் வைக்க தக்க ஏற்பாடுகள் செய்வதாக எழுதியிருக்கிறார்கள்.

திருமதி டி. என். அனந்தநாயகி : அதேபோன்று வடசென்னையிலே ஒரு கம்போஸ்ட் மென்யூர் யார்டு வைத்து, தியாகராஜா கல்லூரி மாணவர்கள் எல்லாம் அவதியுறுமல், அதை நகரத்திற்கு அப்பாற்பட்ட இடத்தில் ஏற்படுத்த அனுப்பிய மனு என்ன வாயிற்று? அதையும் ஏதாவது . . .

கனம் திரு. பூ. கக்கன் : இக்கேள்வி திருச்சி நகரசபையைப் பற்றியது. சென்னை நகரத்தைப் பற்றி வேறொரு கேள்வி கேட்க வேண்டும்.

கிராம அதிகாரிகள்

* 853 **கேள்வி.—திரு. மு. பொ. வடிவேல் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராம உத்யோகஸ்தர்களை முழு நேர ஊழியர்களாக்க அரசாங்கத்திற்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(இ) அப்படியானல், அதைப்பற்றி அரசாங்கத்தின் முடிவு என்ன?

THE HON. SRI V. RAMAIAH : There is no such proposals at present.

திரு. மு. பொ. வடிவேல் : பஞ்சாயத்து யூனியன்கள் வந்துவிட்ட பிறகு கிராம உத்தியோகஸ்தர்களுடைய வேலை 2 மடங்கு, 3 மடங்கு உயர்ந்து இருப்பதால், அவர்களை ஏன் முழு நேர உத்தியோகஸ்தர்களாக நியமிக்க அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவாரா?

கனம் திரு. வெ. ராமையா : நமது கிராம உத்தியோகஸ்தர்களுடைய பிரச்னை குறித்து நீண்டகாலமாக அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டு வந்திருக்கிறது. சமீபத்திலே ஏற்பட்டு இருக்கக் கூடிய பஞ்சாயத்து யூனியன்களால் அவர்களுடைய வேலை அதிகரித்திருக்கிறது. அந்த வேலைப் பளுவுக்கு விசேஷ நிதி உதவியை அரசாங்கம் கொடுத்துக் கொண்டு இருக்கிறது.

திரு. மு. பொ. வடிவேல் : அவர்களுக்குப் பஞ்சாயத்து யூனியனுக்கு போகவர பிரயாணப்படி கொடுப்பதில்லை. ஆனல் கனம் அமைச்சர் அவர்கள் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அது எந்த வகையிலே கொடுக்கப்படுகிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?